நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: **திரு.து.ஹரிராம், பிகாம்,பி.எல்.,**
நீதித்துறை நடுவர், திருவையாறு

நாள் - 07.06.2023 CC. 131 /2010 அ.சா. கோபாலகிருஷ்ணன், த-பெ.சீனிவாசன்

**2** ஆம் எதிரிதரப்பு குறுக்கு விசாரணை -

1) நான் புகார் கொடுத்துள்ள இடமானது திருவையாறு மேற்கு கிராமம் 195/2B கொண்ட இடத்திற்குதான் புகார் கொடுத்தேன். அந்த இடத்தின் விஸ்தீரணம் 3 ஏக்கர் 91 செண்ட் ஆகும். மேற்படி இடத்தை எனது தாயார் அமிர்தலெட்சுமி அம்மாள் என்பவர் எனக்கு தான செட்டில்மெண்ட் 27.01.2006 ஆம் தேதி எழுதி கொடுத்தார், அதன் மதிப்பு எவ்வளவு என் எனக்கு தெரியாது. சீனிவாச கோனார் எனது அப்பா. சேதுராமன் என்பவர் எனது சகோதரர். சேதுராமன் என்பவர் என்மீதும், எனது குடும்பத்தினர் எனது அப்பா, எனது அம்மா, சகோதரர் கண்ணன் மற்றும் சகோதரிகள் சரஸ்வரி, துளசியம்மா ஆகியோர் மீது வழக்கு தொடுத்துள்ளார். அசல் வழக்கு எண்.85/2018 அன்றுவரை நிலுவையில் உள்ளது. அந்த வழக்கானது 24.04.2008 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) மேற்படி பாக வழக்கில் அழைப்பாணை பெற்று கொண்டு உடனடியாக நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாததால் அந்த வழக்கானது எனக்கு எதிராக ஒருதலைபட்சமான தீர்ப்பானது , அதனை மனு செய்து ரத்து செய்தேன். மனு உடனே தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் 2-3 ஆண்டுகள்கழித்து அந்த வழக்கானது மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டது. 195/2B மேற்படி இடத்தை திருவையாறு செட்டிதெருவில் வசிக்கும் தெட்சிணாமூர்த்தி என்பவரின் மனைவி மீனாம்பாள் அவரது குமாரத்தி தர்மாம்பிகை என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்தேன். மேற்படி நான் குற்ற வழக்கும், பாகப்பிரிவினை வழக்கும் நிலுவையில் இருக்கும்போதே மேற்படி நபர்களுக்கு கிரயம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். அதனால் 2011 ஆம் ஆண்டிற்கு பிறகு மேற்படி புல எண் கொண்ட நிலமானது எனக்கு சொந்தமானது அல்ல என்றால் சரிதான்.

3) மேற்படி நிலத்தை 3 ஆம் எதிரியாகிய பழனிச்சாமி என்பவர்தான் சாகுபடி செய்து வந்தார் என்றால் இல்லை. எனது தாயாரும், அவருக்கு பிறகு நானும் சாகுபடி செய்து வந்தோம். சம்பவ நடந்த சமயத்தில் மேற்கண்ட நிலத்தில் நான் என்ன சாகுபடி

செய்தேன் என்ற விபரம் புகாரில் சொல்லவில்லை. நான்தான் சாகுபடி செய்து வருகிறேன் என்று சிட்டா மற்றும் அடங்கல் சான்று ஏதேனும் வாங்கி தாக்கல் செய்துள்ளேனா என்றால், 1 பசலிக்கான சிட்டா அடங்கலை தாக்கல் செய்துள்ளேன்.

**(** எதிரிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**)**

**(**ஒம்./-**திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,**
நீதித்துறை நடுவர், திருவையாறு **)**